வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 36/2020

வழக்குசாட்சி LW4/PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | போஸ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | சிலுவைதங்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 46 |

தேதி 18.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் காவாங்கரை பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 08.03.2019 மாலை 7 மணியளவில் நான் விநாயகபுரம் பத்மாவதி நகர் எக்ஸ்டென்ஷனில் உள்ள எண்43163 என்ற வீட்டு அருகே சென்றுகொண்டிருந்தபோது அங்கு பொதுமக்களும், போலீசாரும் கூட்டாமாக நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது புழல் காவல் ஆய்வாளர் என்னை சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக இருக்க கோரி நான் சம்மதித்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பத்தினை செய்துவிட்டு

போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.